# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION AND COMMERCE (EXTERNAL) – 2006 / 2007

### Held in May 2007

## BBA / COM 16 (II) – FINANCIAL ACCOUNTING - II

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம்: 02 மணித்தியாலங்கள்

---

01. மார்ச் 31 யில் கணக்குகளை முடிக்கின்ற KL லிமிட்டெட், மேலதிக நிதிகளை, சந்தைப்படுத்தக்கூடிய பிணைகளில் முதலீடு செய்யத் தீர்மானித்தது. இதற்கிணங்க 31.03.2006 வரை பின்வரும் நடவடிக்கைகள் இடம்பெற்றது.

2005.04.01 : ரூபா 150,000 பெறுமதியையுடைய 12% முன்னுரிமைப் பங்குகளை ரூபா 120,000 செலவில் பங்கிலாபத்துடன் கொள்வனவு செய்யப்பட்டது (Cum. Dividend). பங்கிலாபம் ஜனவரி 1 யிலும் ஜீலை 1 யிலும் செலுத்தப்படக்கூடியது.

2005.04.01: ரூபா 150,000 பெறுமதியான 10% சிற்றி லிமிட்டின் தொகுதிக்கடன்கள் ரூபா 98 படி வட்டியில்லாமல் கொள்வனவு செய்யப்பட்டது (ex-interest). வட்டி மார்ச் 31 யிலும் செப்டம்பர் 30 யிலும் செலுத்தப்படக்கூடியது.

2005.04.01: ரூபா 50,000 பெறுமதியான ஒவ்வொன்றும் ரூபா 10 படியான ஒரு வங்கியின் சாதாரண பங்குகளை ரூபா 30 படி கொள்வனவு செய்யப்பட்டது.

2005.06.30: ரூபா 50,000/- 10% தொகுதிக்கடன்கள் ரூபா 98 வீதம் வட்டியுடன் விற்கப்பட்டது (cum. interest).
ரூபா 50,000 பெறுமதியையுடைய 12% முன்னுரிமைப் பங்குகளை ரூபா 40,000 செலவில் பங்கிலாபயில்லாமல் கொள்வனவு செய்யப்பட்டது (ex. dividend).

2005.07.01: 12% முன்னுரிமைப்பங்குகளுக்கான பங்கிலாபம் பெறப்பட்டது.

2005.09.30: 10% தொகுதிக்கடன்களுக்கான வட்டி பெறப்பட்டது.
வங்கியிலுள்ள பங்குகளுக்கு இடைக்கால பங்கிலாபமாக ஒவ்வொரு பங்குக்கும் ரூபா 0.40 பெறப்பட்டது

2006.01.01: 12% முன்னுரிமைப்பங்குகளுக்கான பங்கிலாபம் பெறப்பட்டது.

2006.03.15: வங்கியிலுள்ள பங்குகளுக்கு இறுதிப் பங்கிலாபமாக ஒவ்வொரு பங்குகளுககும் ரூபா 0.60 பெறப்பட்டது

2006.03.31: 10% தொகுதிக்கடன்களுக்கான வட்டி பெறப்பட்டது.

2006.03.31: இத்திகதியிலுள்ள ஒவ்வொரு 5 சாதாரண பங்குகளுக்கும் 2 உபகாரப்பங்குகளை வங்கி வழங்கியது.

31 மார்ச் 2006 இல் பிணைப்பத்திரங்களின் சந்தைப்படுத்தக்கூடிய பெறுமதிகள் பின்வருமாறு காணப்பட்டது.

12% முன்னுரிமைப்பங்குகள் ரூபா 74.
10% சிற்றி லிமிட்டெட்டின் தொகுதிக்கடன்கள் ரூபா 99.
வங்கியின் சாதாரண பங்குகள் ரூபா 27

நீர் KL லிமிட்டெடிற்கான முதலீட்டுக் கணக்கைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.

(35 புள்ளிகள்)

02. அ) நிதிக் குத்தகைக்கும் செயற்பாட்டுக் குத்தகைக்குமிடையிலான வேறுபாடுகள் என்ன?

ஆ. 01.04.2006 ல், ABC லிமிட்டெட் 5 வருடங்களைக் கொண்ட நிதிக்குத்தகையின் அடிப்படையில் சொத்து ஒன்றைக் கொள்வனவு செய்தது. இச் சொத்தினுடைய காசு விலை ரூபா 250,200 ஆகும். இவ் நிதிக்குத்தகைகிணங்க, 01.04.2006 லிருந்து, ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் ரூபா 60,000 செலுத்த வேண்டும். எஞ்சும் பெறுமதி எதுவும் இல்லை. ABC கம்பனி நிதிக்கட்டணங்களுக்காக வருடாந்தம் 10% நிலையான நிதிக்கட்டணத்தைச் செலுத்துகின்றது.

நீர் ஒவ்வொரு குத்தகை வருடத்திலும் காணப்படும் நிதிக்கட்டணங்களையும், செலுத்தவேண்டிய மீதியினையும் காட்டக் கூடிய கூற்றைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.

(25 புள்ளிகள்)

03. பின்வரும் பரீட்சை மீதியானது 31.03.2006 ல் Sims லிமிட்டெடின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்

நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனமானது ரூபா 2000,000 ஆகும். இது 7% ஒவ்வொன்றும் ரூபா 10 படியான மீட்கக்கூடிய முன்னுரிமைப்பங்குகள் 50,000 யும், ஒவ்வொன்றும் ரூபா 10 படியான சாதாரணபங்குகள் 150,000 யும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (120,000 பங்குகள்) | | 1230.000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் (40,000 பங்குகள்) | | 400.000 |
| காணி – கிரயத்தில் | 255,000 | |
| கட்டிடங்கள் – கிரயத்தில் | 1170,000 | |
| அலுவலக உபகரணங்கள் – கிரயத்தில் | 93,000 | |
| தளபாடமும் பொருத்தும் – கிரயத்தில் | 112,000 | |
| நன்மதிப்பு | 89,800 | |
| இருப்புக்கள் (01.04. 2005 ) | 72,700 | |
| வங்கியிலுள்ள காசு | 323,700 | |
| கையிலுள்ள காசு | 2,300 | |
| கடன்பட்டோர் | 178,600 | |
| கடன்கொடுத்தோர் | 174,300 | |
| ஐயக்கடனுக்கான ஒதுக்கம் | 2,600 | |
| திரட்டிய பெறுமானத்தேய்வு: | | |
| கட்டிடம் | 173,000 | |
| அலுவலக உபகரணம் | 12,600 | |
| தளபாடமும் பொருத்தும் | 24,800 | |
| நிர்வாகச் செலவுகள் | 176,600 | |
| விற்பனை வினியோகச் செலவுகள் | 77,300 | |
| நிதிச் செலவுகள் | 14,200 | |
| கொள்வனவுகள் | 1,340,000 | |
| விற்பனைகள் | | 2,006,300 |
| வங்கி வட்டி | | 2,800 |
| முதலீடுகள் (விலைகூறப்பட்ட கம்பனியில்) | 26,000 | |
| பொது ஒதுக்கம் | | 70,000 |
| இலாபநட்டக் கணக்கு | | 3,600 |
| நிலையான வைப்புக்கள் | 168,800 | |
| | **4,100,000** | **4,100,000** |

**பின்வரும் மேலதிக தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.**

i. 31.03.2006 யில் இருப்பின் பெறுமதி ரூபா 159,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

ii. கம்பனி நிலையான சொத்துக்கள் மீது பின்வருமாறு பெறுமானத்தேய் விடுகின்றது.
கட்டிடம் 2.5% கிரயத்தில் ஒரு ஆண்டுக்கு

அலுவலக உபகரணம் 10% கிரயத்தில் ஒரு ஆண்டுக்கு
தளபாடமும் பொருத்தும் 5% கிரயத்தில் ஒரு ஆண்டுக்கு

iii. இவ் ஆண்டில் அறவிடமுடியாக்கடன்களின் தொகை ரூபா 1100 பதிவழிக்கப்பட்டது. மொத்தக் கடன்பட்டோரில் 2% ஐயக்கடனாக பராமரிக்கப்படவேண்டும்.

iv. இவ் ஆண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் வரிக்கான ஒதுக்கம ரூபா 140,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

v. இவ் ஆண்டு காலப்பகுதியில், ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 10,000 சாதாரண பங்குகள் 30% வட்டத்துடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முழுக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டுள்ளது. பங்கு வழங்கள் மூலமான முழுப்பணமும் பங்கு மூலதனக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

vi. பணிப்பாளர்களின் தீர்மானங்கள்:

அ) பொது ஒதுக்கத்துக்கு ரூபா 40,000 ஐ மாற்றுதல்.

ஆ) முன்னுரிமைப்பங்குகளுக்கான பங்கிலாபத்தைச் செலுத்துவதுடன், சாதாரண பங்குகளுக்கு 8% பங்கிலாபம் பிரகடனப்படுத்தல்.

**பிரசுரிக்கத்தக்கதாக பின்வருவனவற்றை தயார் செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்.**

1. 31.03.2006 ல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்று.
2. 31.03.2006 ல் உள்ளவாறான ஐந்தொகை
3. சொத்து, பொறி உபகரணங்கள தொடர்பான குறிப்பு.
4. உரிமை மாற்றல் கூற்று.

(40 புள்ளிகள்)

****

**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**FIRST YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION AND COMMERCE (EXTERNAL) – 2006 / 2007**

**Held in May 2007**

**BBA / COM 16 (II) – FINANCIAL ACCOUNTING - II**

Answer **all** questions.

Time: 02 Hours

---

01. KL Ltd whose accounting period ends on March 31, decided to invest some surplus liquid funds in marketable securities. The following transactions took place up to March 31, 2006.

| | |
|---|---|
| 2005.04.01 : | Purchased Rs.150,000 12% preference shares at cost of Rs.120,000 cum dividend. Dividend payable 1 January and 1 July. |
| 2005.04.01: | Purchased Rs.150,000 10% debentures of City Ltd at Rs.98 ex-interest. Interest payable 31 March and 30 September. |
| 2005.04.01: | Purchased Rs.50,000/- A bank ordinary shares of Rs.10 each at Rs.30 |
| 2005.06.30: | Sold Rs.50,000/- 10% debentures at Rs.98/- cum. interest. Purchased Rs. 50,000 /- 12% preference shares at a cost of Rs.40,000 ex-dividend. |
| 2005.07.01: | Received dividend on 12% preference shares. |
| 2005.09.30: | Received interest on 10% debentures. Received interim dividend on A bank shares at Rs. 0.40 per share. |
| 2006.01.01: | Received interest on 12% preference share. |
| 2006.03.15: | Received final dividend of Rs. 0.60 per share on A bank shares. |
| 2006.03.31: | Received interest on 10% debentures. |
| 2006.03.31: | A bank issued 2 bonus shares for 5 ordinary shares held at that date. |

At 31st March, 2006, the marketable values of the securities were,
12% preference share Rs.74
10% City Ltd debentures Rs.99
Ordinary shares of A bank Rs.27

You are required to prepare investment account for the KL ltd.

(35 Marks)

02. a) What are the differences between finance lease and operating lease?

b) ABC Ltd acquired an asset under a five years Finance Lease on 1st April 2006. The cash price of the asset is Rs.250,200. The finance lease requires the payment of Rs.60,000 at the beginning of each year from 1st April 2006. There is no residual value. The company is paying the finance charge at a fixed rate of 10% per annum.

You are required to prepare a statement showing the finance charge and balance outstanding obligations for each of the lease year.

(25 Marks)

03. The following Trial Balance was extracted from the books of Sims Ltd. as at 31st March 2006. The Authorized capital of Sims Ltd is Rs.2,000,000 consisting of 50,000 7% redeemable preference shares of Rs.10 each and 150,000 ordinary shares of Rs.10 each.

| | (Rs.) | (Rs.) |
|---|---|---|
| Ordinary Share Capital (120,000 shares) | | 1230,000 |
| Preference Share Capital (40,000 shares) | | 400,000 |
| Land at cost | 255,000 | |
| Buildings at cost | 1170,000 | |
| Office Equipments at cost | 93,000 | |
| Furniture and Fittings at cost | 112,000 | |
| Goodwill | 89,800 | |
| Stocks 1st April 2005 | 72,700 | |
| Cash at Bank | 323,700 | |
| Cash in hand | 2,300 | |
| Debtors | 178,600 | |
| Creditors | | 174,300 |
| Provision for doubtful debts | | 2,600 |
| Accumulated Depreciation: | | |
| Buildings | | 173,000 |
| Office Equipments | | 12,600 |
| Furniture and Fittings | | 24,800 |
| Administrative expenses | 176,600 | |
| Selling and distribution expenses | 77,300 | |
| Finance expenses | 14,200 | |
| Purchases | 1,340,000 | |
| Sales | | 2,006,300 |
| Bank interest | | 2,800 |
| Investments in quoted companies | 26,000 | |
| General Reserve | | 70,000 |
| Profit & Loss Account | | 3,600 |
| Fixed deposits | 168,800 | |
| | 4,100,000 | 4,100,000 |

**You are given the following additional information:**

i. Stocks on 31st March 2006 was valued at Rs.159,000.

ii. The Company provides depreciation on fixed assets as follows:

Buildings 2.5% per annum on cost
Office equipments 10% per annum on cost
Furniture and Fittings 5% per annum on cost

iii. Bad debts for the year amounted to Rs.1,100 and are to be written off. Provision should be maintained at 2% of the outstanding debtors.

iv. Provision for taxation based on the profits for the year is estimated at Rs. 140,000.

v. 10,000 ordinary shares of Rs.10 each had issued at a premium of 30% per share during the year which was subscribed in full. The full proceeds of the share issue had been credited to the Share Capital Account.

vi. The Directors resolve to:
   a) Transfer of Rs.40,000 to General Reserve.
   b) Declare dividend of 8% on the ordinary share capital in addition to the payment of preference dividend.

**You are required to prepare in a form suitable for publication.**

1. Income Statement for the year ended 31.03.2006
2. Balance Sheet as at 31.03.2006
3. Note to Balance Sheet relating to fixed assets
4. Statement of movement in equity charges.

(40 Marks)